3. தகவல்கோரல்.

(அ) அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர் குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ராமபத்திரன் அதிகாரிகள் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் அந்தஸ்தை பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸர் காலரி பற்றிய பிரச்னை குறித்து இந்த அவையில் எழுப்பக் கூடாது. அது ஒரு மரபாக இருக்கிறது. இது ஒரு அவசர பிரச்னையும் அல்ல, உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடிக்கடி இப்படி எழுந்திருக்க வேண்டாம். ஆபீஸர்ஸ் காலரி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நியாயமும் இல்லை.

(முற்பகல் 10.10)

(ஆ) காமராஜ் சிலை விலக்கு இல்லாமல் இருப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒன்றைக் கூற விரும்புகிறேன். திரு. துரைமுத்துசாமி அவர்கள் எடுத்துக் கூறியது, அதாவது எல்லோரும், அனைத்து அரசியல் கட்சிகளும் மதிக்கின்ற மரியாதை காட்டுகின்ற பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது இதைத்தான் நான் சொன்னேன். இராஜராஜ சோழன் சிலை பற்றிய கேள்வி வரும்போது, அதையொட்டிய கேள்வியை கேட்க வேண்டுமே தவிர, காமராஜ் அவர்களுடைய சிலையைப் பற்றிய கேள்வியை அனுமதித்தால், அதுபோன்று இன்னும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலையைப் பற்றி, பின்னால் கலைஞர் அவர்களுடைய சிலையைப்பற்றி, பெரியார் அவர்களுடைய சிலையைப்பற்றி எல்லாம் கேள்விகள் வரும். அதனால்தான் காமராஜ் அவர்களின் சிலைபற்றிய கேள்வியையும் அனுமதிக்க வில்லையே தவிர வேறு எதுவும் இல்லை.

திரு. ஜே ஜேம்ஸ் கேள்வியை ஏன் அனுமதிக்கவில்லை என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு பிரச்னையை கொண்டு வருவதற்காக இதைச் சொல்ல

1979 ஏப்ரல் 19] (திரு. ஜே. ஜேம்ஸ்)

விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய சிலையில் கடந்த சில நாட்களாக விளக்கு இல்லாமல் இருக்கிறது. பொதுமக்கள் இதைப் பற்றி மிகவும் வருத்தப்படுகிறார்கள். இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அதைத்தான் நானும் கூற விரும்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, தயவுசெய்து உட்கா ருங்கள், அதைத்தான் அவர்கள் சொல்லிவிட்டார்களே.......

(இ) முரசொலிப் பததிரிக்கையை அவையில் விநியோகித்தவர் மீதுநடவடிக்கை எடுப்பது குறித்து.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே நேற்றைய தினம் இங்கு சபையில் ஒரு பத்திரிக்கையை கொடுத்த தற்காக சம்பத்குமார் என்பவர் சம்பந்தமாக நீங்கள் சொல்லும் போது, நாங்கள் குறுக்கிட்டு பேசும்போது, தாங்கள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை, அதைப்பற்றி விசாரிப்பதாக இருக் கிறேன், விசாரணை நடத்தி முடிவு எடுக்கிறேன் என்று தாங்கள் சொன்னீர்கள், ஆனால் இன்றைக்கு வேறுவிதமாக முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. நாங்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் தவறான செய்தியை தருகிறீர்கள். நீங்கள் சொல்லுகின்ற கருத்துக்களையும் நான் ஆய்வில் வைத்துக்கொண்டு இறுதியில் முடிவு எடுக்கிறேன் என்றுதான் சொன்னேன். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், எனக்குள்ள சங்கடங்களை போக்குவதற்கு நான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்...

திரு. என். சங்கரய்யா : நாங்கள் கருத்துக்களை சொல்லும் போது, அதைப்பற்றி பரிசீலனை செய்கிறேன் என்று சொன்னீர் கள், ஆனால் 18-4-79 காலையில் அவரை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நிர்வாகப் பிரச்னை, அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதையெல்லாம் என்னுடைய அறையில்—என்னுடைய சேம்பரில் வந்து கேளுங்கள். இங்கே கேட்பது சரியல்ல.

திரு. என். சங்கரய்யா: எங்கள் கட்சியின் சார்பாக ஒரு அபிப்பிராயத்தை தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தி னுடைய நடவடிக்கைகளை எல்லாம் நாம் இங்கே விமர்சிக்கும் போது, இதைப்பற்றி இங்கு கேட்பதில் என்ன தவறு?